# திருமுறையும் சைவத்திருநெறியும்

## திருவிசைப்பா । திருப்பல்லாண்டு । திருமந்திரம்

செவ்விதாக்கம்

க.இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இந்துமத அலுவல்கள் அமைச்சு

**திருமுறையும் சைவத்திருநெறியும்**

(திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம்)

பதிப்பாசிரியர்கள்:திரு. க. இரகுபரன், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

பதிப்பு: மார்ச் 2016

வெளியீடு:இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

அச்சுப் பதிப்பு:குமரன் அச்சகம்

விலை: ரூபா 700 /=

**Thirumuraiyum Saiva Thirunerium**

Editor:Mr. K. Raguparan & Dr. S. Prashanthan

Edition: March 2016

Published:Dept. Hindu Religious and Cultural Affairs

Printed by:Kumaran Press (Pvt) Ltd

Price: Rs. 700 /=

ISBN: 978-955-9233-41-1

# திருமந்திரத்தில் சங்கமம்

தி. செல்வமனோகரன்

சைவ மெய்யியல் மரபில் தனக்கெனத் தனியிடத்தைக் கொண்ட நூல்களுள் திருமந்திரமும் ஒன்றாகும். வடநாட்டுத் தொடர்புடைய திருமூலர் என்பவரால் தமிழில் 9 தந்திரமும் 3000 பாடல்களும் கொண்டதாக இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இது சித்தர்நூல், சாஸ்திரநூல், தோத்திரநூல், அறிவியல் நூல், அறநூல், கவிதையியல் நூல் அல்லது இலக்கியநூல் எனப் பலவாறு அறிஞர்களால் சுட்டப்படுகின்றது. திருமூலருடைய காலம் கி.பி 1ஆம் நூற்றாண்டு எனவும்[1] கி.பி 6ஆம் நூற்றாண்டு[2] எனவும் கி.பி 4 – கி.பி 6 நூற்றாண்டுகளுக்கிடைப்பட்டதாகவும் எடுத்தாளப்படுகிறது[3]. நாயன்மாருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"[4] எனப் பாடியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. சுந்தரரின் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு இது பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் திருமூலரின் காலத்தை கி.பி 7ஆம் நூற்றாண்டு என்கின்றனர்[5].

இக்கட்டுரையின் தலைப்பு திருமந்திரத்தில் சங்கமம் என்பதாகும். ஆனால் துரதிஷ்டவசமாக திருமந்திரத்தில் சங்கமம் என்ற சொல் இல்லை.

அச்சொல் இல்லை. இச்சொல்லாராய்ச்சி வழி திருவாசகத் துக்குள் நுழைந்தால் சிவபுராணத்தில் “தாவரசங்கமத்துள்” எனும் தொடரைக் காணலாம். இத்தொடருக்கு சங்க நூற்புலவர் அருளம்பலவாணரின் உரை வருமாறு:

“எல்லா உயிர்ப் பொருட்களும் நிலையியற் பொருளாகிய தாவரமும் இயங்கியற் பொருளாகிய சங்கமமும் என இரு கூற்றுள் அடங்கும். தாவர வகையுள் கல், புல், பூண்டு, மரம், என்னும் நான்கும் சங்கம வகையுள் புழு, பாம்பு, பறவை, பல்விருகம், மனிதன், அசுரர், முனிவர், பேய், கணங்கள், தேவர் எனும் பத்தும் கூறப்பட்டனவாகும்[6].

என்கிறார். அதாவது ஈரறிவு உயிர்களிலிருந்து ஆறறிவிலும் மேற்பட்ட உயிர்களாகும் நிலையைப் பெற்ற உயிரிகள் வரை சங்கமம் எனும் சொல்லால் சுட்டுகின்றார். சங்கமம் என மணிவாசகர் கையாண்ட சொல் அப்பொருளிலேயே பல உரையாசிரியர்களாலும் கையாளப்பட்டது[7]. சேக்கிழாரும் திருக்கூட்டமாக அணைந்தவராக அடியாரைச் சித்தரிக் கிறாரே தவிர, சங்கமம் என்ற சொல்லைக் கையாளவில்லை. சிவஞானபோதமும் உண்மை விளக்கமும் வேடம் என்ற சொல்லாலேயே சிவனடியாரைக் குறிக்கின்றன. தோத்திரம் தொட்டு சாத்திரம் ஈறாக சங்கமம் எனும் சொல் கையாளப் படாதது ஆச்சரியத்தைத் தருகின்றது. வீர சைவச் செல்வாக்கு மேலோங்கிய காலத்தில் முதன்மை பெறத் தொடங்கிய இவ்வடசொல் (ஜங்கமம்) மெல்ல சித்தாந்த சைவத்துள்ளும் அடியாரைக் குறிக்கும் சொல்லாகப் புகுந்திருக்க வேண்டும்.

சங்கமமாவது யாது? எனும் வினாவிற்கு “இயங்கு திணைப் பொருள், ஒரு கவி, கலத்தல், கட்டுரை, சைவம், நிலையின்மை, புணர்ச்சி, யாறு கூடுமிடம்'' எனப் பலவாறு அகராதிகள் பொருளுரைக்கின்றன[8]. இதன் வழி சங்கமம் என்றால் கலத்தல் அல்லது இணைத்தல் எனப் பொருள் கொள்ளின் அது ஐக்கியமாதல் என்றாகின்றது. ஆறும் கடலும் கலப்பது போல முக்தி நிலையில் ஆத்மன் இறைவனுடன் கலப்பான் எனும் ஐக்கியவாத சைவத்தையும் பிற்கால வீரசைவ முக்திக் கோட்பாட்டையும் சுட்டிவிடும். பிறிதொரு வகையில் சுட்டின் இது திருமந்திரத்தில் பதி, பசு, பாசம், ஆண், பெண் உள்ளிட்ட பல்வேறு இணைவு களைப் பேசுவதாக அமைந்துவிடும். அல்லது திருமந்திரத்தின் உயிரியல் சார்ந்த, பிறவி பற்றிய கருத்தை சார்ந்த ஆய்வாக மாறிவிடும். அதனை வேறு ஆய்வாளர்கள் ஆய்வு செய்கின்றனர். ஆகவே சங்கமம் எனும் சொல்லிற்கு சிவனடியார் திருக்கூட்டம், தொண்டர் என சைவ மெய்யியற் தளத்தில் நின்று பொருள் கொள்ளுதலே பொருத்த மானதாகும். அந்த வகையில் திருமந்திரம் பேசுகின்ற அடியார், அவர் தம் இயல்பு – சிறப்பு என்பவற்றையும் அது பிற்கால சைவ மெய்யியல் தளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும் ஆராய்வதே சாலப் பொருத்தமானது.

அடியார் பற்றிய திருமந்திரத்தின் கருத்தியல் சற்று வித்தியாசமானது. முதற்கண் திருமூலர், அடியவர் - அடியாரல்லாதவர் என்போரை சமூகத்தில் இனம் காட்ட முற்படு கின்றார். உலகியலில் மூலம் - பிரதி, ஒளி - இருள் என்னும் இருமைத் தன்மை இருப்பதை உணர்ந்து கொண்டு இவ்வேறுபாட்டை எடுத்தாள்வதன் ஊடாக உண்மை அடியவரை இனம் காட்ட அல்லது இலக்கணப் படுத்த முற்படுகின்றார்.

*“தெளிவறியாதார் சிவனை அறியார்*
*தெளிவறியாதார் சீவனுமாகார்*
*தெளிவறியாதார் சிவமாக மாட்டார்*
*தெளிவறியாதார் தீரார் பிறப்பே”*[9]

இதனூடாக ஞானத் தெளிவற்ற பிற சமயவுணர்வுடைய சைவரையும் பிற சமயத்தவரையும் சாடி, அறிவற்ற அவர் சிவனடியாராகார் என்கின்றார். அதே வேளை எது பெரிது என வினாவிச் சண்டை பிடிக்கும் பித்தரைக் காணின் எங்கள் பேர் நந்தி நகும்[10] என்கின்றார். சிவம் பற்றிய ஞானத்தைப் பெறாது வேடம் பூண்டவர் நரகத்தார் ஆவார்[11]. இவ்வேடதாரிகள் அடியாரோ எனில் அடியாராகார்[12]. அவர்களுக்கு பின்வருமாறு உபதேசிக்கின்றார்.

*"ஓடும் குதிரைக் குசை திண்ணம் பற்றுமின்*
*வேடங் கொண்டென் செய்வீர் வேண்டா மனிதரே*
*நாடுமின் நந்தியை நம் பெருமான் தன்னைத்*
*தேடும் இன்பப் பொருள் சென்றெய்தலாமே"*[13]

என்கின்றார். உண்மையறியா வேடநிலையானது கண் இருந்தும் குருடராய் இருக்கும் நிலையாகின்றது. இக்குருடு நீக்கி மெய்யடியாராய்த் திகழ வழி காட்டுகின்றார். அப்படியாயின் மெய்யடியார்கள் யார்? அவர்தம் இயல்பு என்ன? என ஆராய்தல் வேண்டும். உலகியல் பொய்மைக் குருடு நீங்க, நல்ல குருநாதன் திருவருள் வேண்டும்; தெளிவுற வேண்டும்; அவரே தவத்தினர்;

*"ஒடுங்கி நிலை பெற்ற உத்தமர் உள்ளம்*
*நடுங்குவதில்லை நமனுமங் கில்லை*
*இடும்பையு மில்லை இராப்பகல் இல்லை*
*படும் பயனில்லை பற்று விட்டோர்க்கே"*[14]

எனத் தெளிவுறுத்துகின்றார். இவரே பற்றறுத்த மெய்யடியார்;

இறைவனின் திருவருள் பெற்றவரல்லாது ஏனையவர் இம்மாதவத்தின் இயல்பறியார்[15]; சித்தம் சிவமாதல் என்னும் பூரணத் தன்மையைப் பெற்றவர் யாரெனில் தாம் செய்பெருந் தவப்பயனாய் சித்தத்தைச் சிவன்பால் விட்டவர்; அவர் பெருமை

அளவில என்கின்றார். ஒருவர் இறையடியாராக யாது செய்ய வேண்டும் எனில்,

*"தேயத் தேரேறி நிமலன் அருள் பெற்றால்*
*ஆயத்தேரேறி அவன் இவனாமே"*[16]

என்றும் இதற்கு இறையருள்[17] வேண்டும். இவ்வருளால் உருப்பெறும் அடியார் கூட்டம் சிவமெய்யடியார் கூட்டம்[18] எனக்கூறி இத்திருக்கூட்டத்தின் இயல்பைத் திருமந்திரம் பலவாறு பேசுகிறது. இவர் சிவனுக்கு மாறாக நிற்பவரை மதியார்[19]; சிவலோகத்தே தோன்றி, தூய உடலோடு அருந்தவம் புரிந்து, அவன் திருவடி கூடுவார்[20]. இயங்கும் உலகினில் ஈசன் அடியவர் சிறிதேனும் மயங்காது செந்நெறிப் படுவர்,[21] அல்லலில் சேரார்; எட்டு உறுப்பாலாகிய நுண்ணுடலையும் கண்டு தீர்க்க வல்லார்[22]. இறை திருவடி ஒன்றையே, பற்றி என்றும் சிவப்பணி புரிவோரிவர்[23]. அடியார்க்கு வயது வேறுபாடில்லை[24]. அவன்பால் அன்பு பூண்டு அவன் திருவடியையும் நெருங்க வல்லார்[25]. திருமந்திரத்திற்குக் காலத்தால் பின்னெழுந்த சேக்கிழார், அடியார் பெருமையைப் பின்வருமாறு கூறுகின்றார். "அகில காரணர் தாள் பணிவார்[26]. அத்தன் வேண்டி முன் ஆண்டவ ரன்பினான்[27]. பூதமைந்தும் நிலையிற் கலங்கிலும் மாதொருபாகர் மலர்த்தாள் மறப்பிலார்[28]. கேடுமாக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்[29] என பலவாறு அவர்தம் பெருமையும் பெரிய புராணத்தில் முன்வைக்கப்படுகின்றது. மேலும் சேக்கிழார்,

*"கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி*
*வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்"*[30]

என அவர்களின் அதிதீவிர பக்தியைக் கூறுகின்றார்.

சேக்கிழார் தம் பக்தித் திறத்தால் இறைவனை வணங்குவதைத் தவிர வீடு பேற்றைக் கூட விரும்பி வேண்டாதவரே உண்மை

அடியவர் என்கிறார். இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் நிலைகளில் தத்தம் பக்குவத்திற்கு ஏற்ப இறைவனைச் சிக்கென பிடித்து நிற்கும் தன்மையினர் மெய்யடியார் கூட்டத்தினர் என எடுத்தாளப் படுகின்றது. இம்மெய்யடியார்களைத் திருமூலர் நான்கு வகையினராக எடுத்துரைக்கின்றார்.

*''பக்தர் சரிதை படுவோர் கிரியையோர்*
*அத்தகு தொண்டர் அருள் வேடத் தாகுவோர்*
*சுத்த வியமாதி சாதகர் தூ யோகர்*
*சித்தர் சிவஞானச் சென்றெய்து வோர்களே''*[31]

எனும் பாடல் இவ்வகைப்பாட்டை எடுத்துரைக்கின்றது. அதாவது,

1. பக்தர்
2. தொண்டர்
3. தூயோகர் - சிவயோகர்
4. சித்தர் - சிவஞானியர்

என்போரே அவர்களாவர் மாணிக்கவாசகரும் இதனை,

*"தொண்டர்காள் தூசி செல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்*
*ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்*
*திண்டிறற் சித்தர்களே கடைக் கூழை செல்மின்கள்*
*அண்டர் நாடாள்வோம் நாம் அல்லற்படை வாராமே"*[32]

எனும் பாடலில் எடுத்தாண்டிருப்பது சுட்டத்தக்கது. தொண்டர் என்னும் சொல் அடியார் - அடியவர் பணி என எடுத்தாளப்படுகிறது. திருமூலர் தொண்டு என்பதைப் ''பணி'' எனும் சொல்லால் விளக்குகிறார்.

*''இது பணிந்து தெண்டிசை மண்டலம் எல்லாம்*
*அது பணி செய்கின்ற அவனொரு கூறன்*
*இது பணி மானுடன் செய்பணி"*[33]

என்கிறார். நோன்பு நெறியிற் செல்வோர் தொண்டர் என்கிறார். பக்தர் யாரெனில் சிவபக்தர்; 'இது பணி செய்வது பக்திமைகாணே'[34] எனக் கூறுகின்றார். பக்தன் கிரியை, சரியை. பயில்வுறுவோன் என்றும்[35] அவ்வாறு பயில்வுற்ற அடியவன் இறையருளால் குற்றங்கள் நீக்கப்பெறுவான்; அந்நிலை அவனை யோகத்திற்கு அழைத்துச் செல்லும்; அந்த யோகத்தின் வழி பெறும் ஞானம் எண்ணமாகிய சித்தம் குருவருளால் சிவமாயந் தன்மை பெறும்.[36] இவ்வாறு சித்தம் சிவமாய தன்மை பெற்ற நிலையில் எல்லையில்லா அன்பினால் பக்தன் உருகுவான். எந்நாளும் இடையுறாது அடிமைப் பணி செய்தொழுகுவான். இறைவனின் கமல பொற் பாதத்திற்கு முன் நின்று அருமறை அருள திருவடி உணர்வு கைவந்த மெய்யடியாரை ஊர்ந்து செறிந்த அறிவொளியால் விளக்கியருள்வான்[37]. இப்பிரிப்பு, சரியை – தொண்டர், கிரியை – பக்தர், யோகம் - சிவயோகியார், ஞானம் - சித்தர் எனும் தளத்தில் அமைக்கப்பட்டது எனலாம். திருவடி உணர்வு கைவரப்பெற்ற சிவஞானியினர் சிவனோடு கலந்திடுவர். (சாயுச்சியம்). எண் வகைத் தவத்தால் சிவயோகம் மேற்கொண்டவர் சிவனார் திருவருள் பெறுவார் (சாரூபம்) நோன்பினராய கிரியையாளர் சிவன் அணுக்கராய் இருப்பார்; இவரே தொண்டர் - (சாமீபம்) சீலத்தராய சரியையாளர் சிவனுலகில் இருப்பர் அவரே பக்தர் - (சாலோபம்) என்னும் கருத்துக்களைத் திருமந்திரத்தில்[38] காண முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நால்வகை அடியவரும் பற்றற்றோர்; மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம் என்னும் நிலைகளைக் கடப்பர்; இவருள் சிவஞானியரே மேலோர் என்பர். ஆயினும் அடியவருள் பாகுபாடு இல்லை; அவர் யாவரும் பற்றி நிற்கும் பற்றுதிப் பொருள் இறையாகிய சிவனே எனத் திருமந்திரம் எடுத்துரைக்கின்றது[39].

இவ்வடியார் பெருமையைத் திருமந்திரம் இருதளக்கூறுகளில் எடுத்துரைக்கிறது.

1. தற்கூற்று – தன்னுணர்வுப் பாடல் - தன்மைப் பரவல்

2. பிறர்கூற்று – படர்க்கைப் பரவல்

ஆசிரியர் தன்னுணர்வு சார்ந்து தன்னையே அடியவராய் பாவனை செய்து தற்கூற்றாய்க் கூறுகின்றார். இதற்கு உதாரணமாக,

*“அடங்காத என்னை அடக்கி அடி வைத்து*
*இடங்காண் பரானந்தத்தே என்னை இட்டு*
*நடந்தான் செயும்நந்தி நன்ஞானக்கூத்தன்*
*படந்தான் செய் துள்ளுள் படித்திருந் தானே”*[40]
என்கிறார். அதே வேளை படர்க்கைப் பரவலில்,

*“அடியார் அரனடி யானந்தங் கண்டோர்*
*அடியா ரவராவ ரத்தரு ளுற்றோர்*
*அடியார் பவரே யடியவ ராமால்*
*அடியார் பொன்னம்பலத் தாடல் கண்டாரே”*[41]
எனப்பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இவ்வளவு பெருமைகளையும் உடைய அடியவரை வழிபடல் சிவனை வழிபடுதலை ஒக்கும் என்கிறார் திருமூலா். இவருக்கு திருவமுதூட்டல் சிவனுக்கு திருவமுதூட்டல் ஆகும் என்கிறாா்[42]. இதனால் தான் ஔவையும் “தொண்டர் தம் பெருமை செல்லவும் பெரிதே[43] என்றாா் போலும்.

வீரசைவம் சங்கமரை ஜீவன் முக்தராகவும் , அவதார புருஷர் களாகவும் இறை பணி மேற்கொள்ளத் தோன்றியவர்களாவும் திருக்கூட்டத்தவர்களாகவும் எடுத்தாள்கிறது[44].

இவர்கள் கூட்டங் கூட்டமாகத் திரிபவர்கள் என்பர். பெரியபுராணம் சுட்டும் நாயன்மார்களின் வரலாறு இதற்குப் பொருந்துவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு வீர. சைவம் முன்வைக்கும் அஷ்டாவரணங்களில் ஒன்றாகவும் சடுத் தலங்களில் இரண்டாம் மூன்றாம் நிலைக்குரியவையாகவும் சங்கமம் எடுத்தாளப்படுகின்றது[45]. சைவசித்தாந்தம் முக்திக்குரிய மார்க்கங்களில் ஒன்றாக சங்கம வழிபாட்டை எடுத்துரைக்கின்றது. அடியார்க்கு செய்யும் பணி இறைவர்க்குச் செய்யும் பணி என்பதைத் தெளிவுறுத்துகின்றது. மெய்கண்டார்,

*“செம்மலர் நோன்றாள் சேரலொட்டா*
*வம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேய மலிந்தவர் வேடமு*
*மாலயந் தானும் அரனெனத் தொழுமே”*[46]

என எடுத்துரைத்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. திருமந்திரத்திற்கு உரை செய்த ப.இராமநாதன் அவர்களின் பின்வரும் கூற்று கவனிக்கத்தக்கது.

“இத்திருமந்திரம் பத்தாந் திருமுறையாகப் பண்டுளோர் தொகுத்தமைக்குக் காரணம் சிவஞான போதச் செழுந்தமிழின் பத்தாம் நூற்பாக் குறிப்பாகுமென்ப. அந்நூற்பாவின் குறிப்பு இறைபணி நிற்றல். இறைபணி நிற்பார் சிவபெருமானின் சிறந்த அடியவராவர்.....”[47]

இக்கூற்று கால ஆராய்ச்சியடிப்படையில் ஆராயப்பட வேண்டியதாயினும் சிவஞான போத பத்தாஞ் சூத்திரம்,

*“அவனே தானே யாகிய வந்நெறி*
*மலமாயை தன்னொடு வல்வினையின்றே”*[48]

எனக் கூறிய வழி அமைந்துள்ளது என்பது சுட்டியுரைக்கத்தக்கது.

திருமந்திரம் உலகியல் வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும், நிலையற்றன தொட்டு நிலையானது வரையும், பதி, பசு, பாசம், முக்தி, அதற்கான வழிகள் என ஒவ்வோர் உயிர்க்குமான அனைத்துத் தேவைகளையும் அம்சங்களையும் சங்கமிக்கச் செய்யும் நூலாக அமைந்து இறைநிலை பெற யாவர்க்கும் உகந்த வழியாக அடியவர் வழிபாடான சங்கம வழிபாட்டை சைவமெய்யியற்றளத்தில் எடுத்துரைத்து நிற்கின்றது.

## அடிக்குறிப்பு

1 சிதம்பரனார், ஏ.துடிசைக்கிழார், 1969 திருமூலநாயனார் வரலாறு, திருமந்திரம், சைசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், ப.61 Rasamanikam.M, 1964 Development of saivaism in south India 300 – 1300 A.Dharma puram Adinam Madras, p.34

2 dasgupta.s,1975, A. History 08 Indian philosophy, Volume.V, motiala.Banarsidas, Delhi, p. 19.

3 Narayana Ayyar.C.V.1935, Origin and early History of saivaism in South India University of Madras, Madras. p.204

4 திருதொண்டர் தொகை, பா.5.

5 ஞானகுமாரன், நா. பேராசிரியர், 2012, சைவசித்தாந்தத் தெளிவு, தூண்டி, திருநெல்வேலி, பக்.11 - 13

6 அருளம்பவாணர்,சு.பண்டிதமணி,1967, திருவாசக ஆராய்ச்சியுரை, முதலாம் பாகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை. பக்.10-12

7 இக்கட்டுரையில் கையாளப்பட்டுள்ள திருமந்திர நூல்களாகப் பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளவும் திருமந்திரம், 2003, திருப்பனந்தாள் வெளியீடு.இராமநாதன்.ப.(உரை),2001 கழகவெளியீடு.

8 கழகத் தமிழகராதி, 1993, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, ப.418,கதிரவேற்பிள்ளை.நா 2003, தமிழ்மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை,ப.563

9 திருமந்திரம்,பா.1480

10 மேலது, பா.1568

11 மேலது, பா.1668

12 மேலது, பா.1672
13 மேலது, பா.1679
14 மேலது, பா.1624
15 மேலது, பா.1625
16 மேலது, பா.1651
17 மேலது, பா.1649
18 மேலது, பா.1883
19 மேலது, பா.1831
20 மேலது, பா.1832
21 மேலது, பா.1836
22 மேலது, பா.1837
23 மேலது, பா.1841
24 மேலது, பா.1842
25 மேலது, பா.1843
26 பெரியபுராணம், பா.139
27 மேலது, பா.140
28 மேலது, பா.142
29 மேலது, பா.143
30 மேலது
31 திருமந்திரம்,பா. 1446
32 திருப்படையெழுச்சி, பா - 614
33 திருமந்திரம்,பா. 1454
34 மேலது, பா.1454
35 மேலது, பா.1454
36 மேலது, பா.1455
37 மேலது, பா. 1456
38 மேலது, பா. 1420
39 மேலது, பா. 2104
40 மேலது, பா. 2695
41 மேலது, பா. 2694
42 மேலது,பா. 1884
43 ஔவையார் 1959, தனிபாடற்றிரட்டு, பா.56.
44 இரத்தினசபாபதி. டாக்டர்.வை., 1990, வீரசைவம், சென்னைப் பல்கலைக்கழகம், பக்.181.182
45 மேற்படி பக். 189 - 208
46 சிவஞானபோதம், சூத்.12
47 இராமநாதன்.ப, (உரை), 2001, திருமந்திரம், கழகவெளியீடு, சென்னை,ப.29
48 சிவஞானபோதம், சூத்.10